தொழில் திணைக்களத்தின்

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம்சாரா - தொகுதி 2 சேவை வகுதியின் சுருக்கெழுத்தாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

தொழில் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம்சாரா - தொகுதி 2 சேவை வகுதியின் சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளின்படி திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், அதாவது 2026.12.14 ஆம் திகதியில், கீழே பந்தி 3.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.0 ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கப்படும் பதவிகளும் வெற்றிடங்களின் எண்ணிக்கையும்

தொடர் இல.	பதவிப் பெயர்	வெற்றிடங்களின் எண்ணிக்கை
1	சுருக்கெழுத்தாளர் (சிங்கள மொழிமூலம்)	09
2	சுருக்கெழுத்தாளர் (ஆங்கில மொழிமூலம்)	01

0.1 பதவியின்/ பதவிகளின் தன்மை: நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

1.2 பதவிகளின் கடமைகளின் தன்மை

	அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெயர்	கடமைகள்
1	சுருக்கெழுத்தாளர்	- தொழில் நீதிமன்றத்தின் வழக்கு விசாரணை நடவடிக்கைகளை சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்தல் - சேவை முடிவுறுத்தல் பிரிவு மற்றும் தொழில் உறவுகள் பிரிவின் விசாரணை நடவடிக்கைகளை சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்தல் - சம்பள நிர்ணய சபைக் கூட்டங்களின் நடவடிக்கைகளை சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்தல் - மேற்படி சந்தர்ப்பங்களிலும் ஏனைய திணைக்களத் தேவைகளின்போதும் பெறப்படும் அனைத்து நடவடிக்கைக் குறிப்புகளையும் கணினியில் தட்டச்சு செய்து அச்சிடப்பட்ட பிரதிகளைப் பெற்றுக்கொள்ளல் - பதவிக்கு அமைவாக திணைக்களத் தலைவரினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள

2.0 ஆட்சேர்ப்பு முறை

இந்த ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்முறைப் பரீட்சை என்பவற்றைக் கொண்டதாகும். முதலாவதாக எழுத்துப் பரீட்சை நடாத்தப்படுவதுடன், வினாத்தாளில் 40% இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகள் தொழில்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சையானது ஒரு போட்டிப் பரீட்சை என்பதனால், நியமனத்தைப் பெறுவதற்குத் தகுதிபெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% ஏனும் பரீட்சார்த்திகளால் பெறப்பட வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் வகையில், பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் வரிசைமுறையைப் பின்பற்றி வெற்றிடங்கள் நிரப்பப்படும். (இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.)

பரீட்சையானது சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பும் எந்தவொரு மொழி மூலத்திலும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளி திறமையின் அடிப்படையில் அப்பதவிகளுக்கும், சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளி திறமையின் அடிப்படையில் அப்பதவிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்படும்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

3.0 தகைமைகள்

3.1 கல்வித் தகைமைகள்

3.1.1 சிங்கள மொழிமூல விண்ணப்பதாரர்களுக்காக

(அ)

- சிங்கள மொழி
- கணிதம் மற்றும்
- மேலும் இரண்டு (02) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ/தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு (01) பாடத்திலேனும் (பொதுச் சாதாரணப் பரீட்சை தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்.

3.1.2 ஆங்கில மொழிமூல விண்ணப்பதாரர்களுக்காக

(அ)

- ஆங்கில மொழி
- கணிதம் மற்றும்
- மேலும் இரண்டு (02) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ/தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு (01) பாடத்திலேனும் (பொதுச் சாதாரணப் பரீட்சை தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்.

3.2 தொழில்சார் தகைமைகள்:

- சிங்கள மொழிமூல விண்ணப்பதாரர்களுக்காக

  மூன்றாம்நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து மற்றும் கணினித் தட்டச்சு (சிங்கள மொழிமூலம்) பற்றிய ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல் அல்லது க.பொ.த. (சா/தர) பரீட்சையில் மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் பாடத்தில் (சிங்கள மொழிமூலம்) திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

- ஆங்கில மொழிமூல விண்ணப்பதாரர்களுக்காக

  மூன்றாம்நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து மற்றும் கணினித் தட்டச்சு (ஆங்கில மொழிமூலம்) பற்றிய ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல் அல்லது க.பொ.த. (சா/தர) பரீட்சையில் மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் பாடத்தில் (ஆங்கில மொழிமூலம்) திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

  குறிப்பு: சுருக்கெழுத்து மற்றும் கணினித் தட்டச்சுக்காக மூன்றாம்நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

- தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்குச் சொந்தமான தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகள்
- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபைக்குச் சொந்தமான பயிற்சி நிலையங்கள்
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குச் சொந்தமான பயிற்சி நிலையங்கள்
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்குச் சொந்தமான பயிற்சி நிலையங்கள்

3.3 உடற்றகைமை:

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடலியல் மற்றும் உளவியல் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3.4 ஏனைய தகைமைகள்

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- துறவியாக அல்லது மதப் பிரிவு ஒன்றின் பூசகராக இருத்தலாகாது- விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அனைத்துத் தகைமைகளையும் மற்றும் குறிப்பிட்ட வயதெல்லையையும் சகல வகைகளிலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே அவர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவராக ஏற்றுக்கொள்ளப்படுவார்.

4.0 வயதெல்லை

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஆகக்குறைந்த வயது18 இற்குக் குறையாமலும் ஆகக்கூடிய வயது 30 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5.0 சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்

5.1 இந்நியமனமானது மூன்று (03) வருடங்கள்கொண்ட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

5.2 தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

5.3 அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளும் இதற்கு ஏற்புடையதாக அமையும்.

5.4 அரச சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக்கோவையின் விதிகளுக்கும் அவற்றில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும், ஏனைய திணைக்களக் கட்டளைகளுக்கும், 2013.04.11 ஆம் திகதியன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் விதிக்கப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அத்துடன் அவ்வாட்சேர்ப்பு நடைமுறையில் இதனகத்துப் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் சுருக்கெழுத்தாளர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர்.

5.5 கொழும்பு 05, நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

6.0 சம்பள அளவுத்திட்டம்

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 கொண்ட சம்பளச் சுற்றறிக்கையின் MN – 1 - 2025 இற்கு அமைவாக இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 45,230 – 10×540 - 11×630 - 10×890 – 10×1,190 - ரூ. 78,360/- ஆகும்.

7.0 எழுத்துப் பரீட்சையும் தொழில்முறைப் பரீட்சையும்

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

7.1 எழுத்துப் பரீட்சை

வினாத்தாள்	காலம்	ஆகக்கூடிய புள்ளிகள்	சித்தியடைவதற்கான புள்ளிகள்
- சிங்கள மொழிமூல விண்ணப்பதாரர்களுக்காக: பொது அறிவும் கட்டுரையும் (சிங்கள மொழிமூலம்) -ஆங்கில மொழிமூல விண்ணப்பதாரர்களுக்காக: பொது அறிவும் கட்டுரையும் (ஆங்கில மொழிமூலம்)	02 மணித்தியாலம்	100	40%

(அ) எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம்

பொது அறிவும் கட்டுரையும்

- உள்நாட்டு மற்றும் சர்வதேசத் துறைகளின் நடப்பு விவகாரங்கள் பற்றிய பொது அறிவைப் பரீட்சித்தல்

- கால முக்கியத்துவம் வாய்ந்த தரப்பட்ட தலைப்புகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒரு தலைப்பின் கீழ் கட்டுரையொன்றை எழுதுதல்

(விசேட கருத்துகளை முன்வைத்தல், மொழித் திறன், சரியான இலக்கணம் மற்றும் எழுத்துக்கூட்டல் ஆகியன கவனத்தில் கொள்ளப்படும்).

7.2 தொழில்முறைப் பரீட்சை

பாடம்	ஆகக்கூடிய புள்ளிகள்	சித்தியடைவதற்கான புள்ளிகள்
-சிங்கள மொழிமூல விண்ணப்பதாரர்களுக்காக: சுருக்கெழுத்தும் தட்டச்சும் (சிங்கள மொழிமூலம்) - ஆங்கில மொழிமூல விண்ணப்பதாரர்களுக்காக: சுருக்கெழுத்தும் தட்டச்சும் (ஆங்கில மொழிமூலம்)	100	40

(ஆ) தொழில்முறைப் பரீட்சைக்கான பாடத்திட்டம்

- சிங்கள மொழிமூல விண்ணப்பதாரர்களுக்காக:

ஐந்து (5) நிமிடங்களுக்குள் இடைவிடாது வாசிக்கப்படும் பந்தி ஒன்றை நிமிடத்திற்கு 70 சொற்கள் எனும் வேகத்தில் சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்து, அக்குறிப்புகளை நிமிடத்திற்கு 7 சொற்கள் எனும் வேகத்தில் கணினியில் தட்டச்சு செய்தல்.

– ஆங்கில மொழிமூல விண்ணப்பதாரர்களுக்காக

ஐந்து (5) நிமிடங்களுக்குள் இடைவிடாது வாசிக்கப்படும் பந்தி ஒன்றை நிமிடத்திற்கு 80 சொற்கள் எனும் வேகத்தில் சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்து, அக்குறிப்புகளை நிமிடத்திற்கு 7 சொற்கள் எனும் வேகத்தில் கணினியில் தட்டச்சு செய்தல்.

08.0 பொதுவான நேர்முகப் பரீட்சை

பொதுவான நேர்முகப் பரீட்சையானது தகைமைகளைப் பரிசோதிப்பதற்காக மட்டுமே நடத்தப்படுவதுடன் அதில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

**கவனிக்க:

நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றுதலானது நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்தலாகக் கருதப்படமாட்டாது.

09.0 பரீட்சைக் கட்டணம்:

இந்தப் பரீட்சைக்கான கட்டணம் ரூ 500/- ஆகும். அக்கட்டணத்தை தொழில் ஆணையாளர் நாயகத்தின் பெயரிலுள்ள, மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையின் 086100169026274 எனும் இலக்கமுடைய கணக்கிற்கு வரவு வைத்து, அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் பிரிக்க முடியாதவாறு ஒட்டி அனுப்ப வேண்டும்.

(இந்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை பரீட்சார்த்தி தனது கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.)

குறிப்பு: பரீட்சை இரத்துச் செய்யப்பட்டாலன்றி, பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை வேறொரு பரீட்சைக்காக மாற்றீடு செய்யவும் முடியாது.

10.0 விண்ணப்பிக்கும் முறை

10.1 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி, 21 × 29 செ.மீ. (A4) அளவுள்ள கடதாசிகளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தை தாமே தயாரித்துக்கொள்ள வேண்டும். இல. 1.0 முதல் 6.0 வரையிலான தலைப்புகள் 01 ஆம் பக்கத்திலும், இல. 07.0 முதல் 11.1 வரையிலான தலைப்புகள் 02 ஆம் பக்கத்திலும், இல. 11.2 முதல் 14.0 வரையிலான தலைப்புகள் 03 ஆம் பக்கத்திலும், இல. 15.0 முதல் 16.0 வரையிலான தலைப்புகள் 04 ஆம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

10.2 விண்ணப்பப் படிவங்கள், தான் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில் தயாரிக்கப்பட வேண்டும்.

10.3 உரிய மாதிரிப் படிவத்துடன் ஒத்திராத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத முழுமையற்ற நிலையில் உள்ள விண்ணப்பப் படிவங்கள், எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

10.4 இந்தப் பரீட்சை, திகதி கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மட்டுமே நடத்தப்படும்.

10.5 விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமையிட்டு எவ்வித அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. தபாலில் காணாமற்போகும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான முறைப்பாடு ஏதும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

10.6 போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதலானது, விண்ணப்பதாரி இப்பதவிக்கான தகைமைளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஏற்றுக்கொள்ளலாகக் கருதப்படமாட்டாது

10.7 விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், “தொழில் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம்சாரா -தொகுதி 2 சேவை வகுதியின் சுருக்கெழுத்தாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026” எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

10.8 விண்ணப்பப் படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், பிரசித்த நோத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானி மூலம் பெயரிடப்பட்ட பதவி வகிக்கும் அதிகாரி அல்லது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் தரப்படுத்தலின்படி மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டத்தில் அரச சேவையின் நிரந்தரப் பதவியை வகிக்கும் அதிகாரி ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

10.9 இவ்வெற்றிடங்களை நிரப்புவது, நிரப்பாதிருப்பது அல்லது வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புவது மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலான இறுதியான தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் தொழில் ஆணையாளர் நாயகத்திற்கே உள்ளது.

11.0 விண்ணப்பத்தை அனுப்புதல்:

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், 2026.12.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

தொழில் ஆணையாளர் (தாபனம்)

தொழில் திணைக்களம்

08 ஆம் மாடி

“மெஹெவர பியெச” கட்டிடம்

கொழும்பு 05

12.0 பரீட்சைக்குத் தோற்றுதல்:

(அ) அனைத்து வகையிலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ளதுடன், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் கிடைக்கும் வகையில் இலங்கை மன்றக் இனால் அனுமதி அட்டைகள் வழங்கி வைக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர்களுக்கு அவர்களால் வழங்கப்பட்டுள்ள கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி மூலமாகவும் அனுமதி அட்டையை பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான இணைப்பு (Link) வழங்கப்படும். அதனூடாக, விண்ணப்பதாரர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிட்டு, அனுமதி அட்டை தபாலில் கிடைக்கப்பெறாவிடின் இவ்வாறு பதிவிறக்கம் செய்துகொள்ளக்கூடிய இயலுமை காணப்படுகின்றது. தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(இ) பரீட்சார்த்தியொருவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதான மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

13.0 பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:

பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காக கீழ்க்காணும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

14.0 பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்:

பரீட்சார்த்தியொருவர் இந்த எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ, அல்லது பரீட்சை நடைபெறும்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்பட இடமுண்டு. பரீட்சார்த்தி ஒருவர் தெரிந்துகொண்டே பொய்யான தகவலை வழங்கியிருப்பதாக கண்டறியப்பட்டால், அல்லது ஏதேனும் ஒரு முக்கியமான விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருந்தால், அவர் சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

15.0 இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

தொழில் ஆணையாளர் நாயகம்

2026.11.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED